தக்கலை மறைமாவட்ட மாணவர்களுக்கான இறையழைத்தல் முகாம் 2026 மே 5 முதல் 7- வரை முக்கூட்டுக்கல், புனித மரியன்னை இளங்குருமடத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மாணவர்களை சந்தித்து உற்சாகமூட்டினார். இதில் ஆறு மானணவர்கள் கலந்துகொண்டனர். பேரருள்தந்தை ஜோஸ் முட்டாத்துபடம், பேரருள்தந்தை தாமஸ் சத்தியநேசன், அருள்தந்தை பாபி கொச்சுபரம்பில் (MST) ஆகியோர் நிகழ்வுகளை வழிநடத்தினர். அருட்தகோதர்கள் பல்வேறு அமர்வுகளை வழிநடத்துவதிலும் வழிகாட்டுவதிலும் உதவினர். அருள்தந்தை ஜார்ஜ் கண்டத்தில் அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## SPARK கோடைக்கால முகாம் 2026

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் Educare துறையின் சார்பில், “SPARK” எனும் கோடைக்கால முகாம் 2026 மே 11 முதல் மே 16 வரை சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் வாசிப்பு, கேட்பு மற்றும் பேச்சுத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் டாக்டர் அமல்ராஜ் மற்றும் பேராசிரியர் ஜெரோம் ஆகியோர் சிறப்பு ஆசிரியர்களாக கலந்து கொண்டு பயனுள்ள பயிற்சிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியை அருட்சகோதரி செல்வமேரி சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

முகாமின் ஒவ்வொரு நாளும் திருப்பலியுடன் தொடங்கப்பட்டதால், மாணவர்களிடையே இறைபக்தியும் ஆன்மீக சிந்தனையும் வளர்க்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற கல்வி வகுப்புகள் மாணவர்களின் மொழித் திறன்களை வளர்க்க உதவின. மாணவர்கள் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபட பல்வேறு செயல்பாடுகள் மற்றும் பணிகள் வழங்கப்பட்டன. அவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டதால் போட்டி மனப்பான்மையும் ஒற்றுமை உணர்வும் அதிகரித்தது. சலிப்பை போக்கவும் மாணவர்களிடையே நெருக்கத்தை உருவாக்கவும் சுவாரஸ்யமான விளையாட்டுகளும் இடம்பெற்றன.



மேலும் யோகா, தியானம் மற்றும் குழு செயல்பாடுகள் மாணவர்களின் உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்தின. இந்த முகாம் மாணவர்களிடையே ஒழுக்கம், பொறுப்புணர்வு, தன்னம்பிக்கை மற்றும் சமூக விழிப்புணர்வை வளர்த்ததோடு, அவர்களின் எதிர்காலக் கனவுகள் மற்றும் தொழில் நோக்கங்களைப் பற்றியும் ஆழமாக சிந்திக்கத் தூண்டியது. "SPARK" முகாம் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்த மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது.

## தையல் திறன் பயிற்சி நிறைவு விழா

தக்கலை மறைமாவட்டத்தின் கீழ் பத்துகாணியில் 2026 மே 5 அன்று 3 மாத கால தையல் திறன் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி தலைமை தாங்கினார். திருமதி லதா பயிற்சியாளராக செயல்பட்டு, 14 பயனாளிகளுக்கு தையல் தொழில் திறன்களை வழங்கினார். நிகழ்ச்சியை திருமதி ரீனா ஒருங்கிணைக்க, திருமதி லிஸி மேற்பார்வையிட்டார். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயனாளிகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து நன்றியை தெரிவித்தனர். திறன் மேம்பாடு தனிநபர் முன்னேற்றத்திற்கும், வாழ்வாதார முன்னேற்றத்திற்கும் முக்கியம் என அருட்தந்தை மகேஷ் ஆண்டனி வலியுறுத்தினார். நிகழ்ச்சி குழுப் புகைப்படத்துடன் இனிதே நிறைவுற்றது.



## சர்வதேச செவிலியர் தினம்

சர்வதேச செவிலியர் தினத்தை முன்னிட்டு, மே 12 அன்று கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் நோய்த்தடுப்பு சிகிச்சை பராமரிப்பு(Mother Therasa Palliative Care) பிரிவில் பணியாற்றும் செவிலியர்கள் கௌரவிக்கப்பட்டனர். திருமதி ஷைனி, செல்வி மிஸ்ஸி மரியா மற்றும் திரு செல்வம் ஆகியோர் தங்களது அர்ப்பணிப்பான சேவைக்காக சிறப்பாக பாராட்டப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பங்கேற்ற பணியாளர்கள் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர். நோயாளிகளின் நலனுக்காக தன்னலமின்றி சேவை செய்யும் செவிலியர்களின் பணி சமூகத்திற்கு மிகுந்த அர்த்தமுள்ளது என இயக்குநர் பாராட்டினார்.

## பெண்களுக்கான இருசக்கர வாகன பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் முஞ்சிறை ஆலயத்தில் இருசக்கர வாகன பயிற்சி திட்ட தொடக்க விழா 13 மே 2026 அன்று சிறப்பாக நடைபெற்றது. இத்திட்டத்தில் 19 பேர் இணைந்து பயிற்சி பெற பதிவு செய்தனர். நிகழ்ச்சிக்கு சங்க இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி தலைமை தாங்கி, திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் அவசியத்தை வலியுறுத்தினார். பங்குத்தந்தை அருட்தந்தை அனில் ராஜ் வாழ்த்துரை வழங்கி, பயிற்சியாளர்களை ஊக்குவித்தார். பயிற்சியாளர் சுஜிதா மற்றும் மேற்பார்வையாளர் திருமதி லிஸி ஆகியோர் பயிற்சியின் நோக்கங்களையும் பயன்களையும் விளக்கினர். இந்நிகழ்வு இளைஞர்களின் தன்னம்பிக்கை, தற்சார்பு மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்தும் முக்கிய முயற்சியாக அமைந்தது.



**செயலர்**
**அருட்தந்தை மகேஷ்,**

# அருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில்

## கல்வி, இறைநம்பிக்கை மற்றும் மனிதநேயத்தின் ஒளிவிளக்கு

ஒரு மனிதரின் வாழ்க்கை அவருடைய சாதனைகளால் மட்டுமல்ல, அவர் தொட்ட எண்ணற்ற இதயங்களால் அளவிடப்படுகிறது. அத்தகைய அரிய மனிதர்களில் ஒருவராக விளங்குபவர் அருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள். இறைஅர்ப்பணிப்பு, கல்விச்சேவை, சமூக அக்கறை, தொலைநோக்குப்பார்வை, தன்னலமற்ற உழைப்பு ஆகியவற்றின் அழகிய சங்கமமாக அவரது வாழ்க்கை திகழ்கிறது. ஆயிரக்கணக்கான மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், அருட்பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்வில் அழியாத தடத்தைப் பதித்துள்ள அவர், உண்மையிலேயே சாதனைத்துடிப்புள்ள ஒரு தலைமுறையை உருவாக்கிய அருட்தொண்டர்.

அருட்தந்தை அவர்கள் 1961 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், பாம்பாடிக்கு அருகிலுள்ள கூரப்படா என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் திரு. ஸ்கரியா மற்றும் திருமதி மரியம்மா. சிறுவயதிலிருந்தே சுறுசுறுப்பு, ஒழுக்கம், கீழ்ப்படிதல், இறைபக்தி மற்றும் கல்வியில் ஆர்வம் ஆகிய நற்பண்புகளால் சிறந்து விளங்கினார். கல்வியில் மிகுந்த திறமை பெற்றதுடன், ஆசிரியர்களின் அன்பையும் நண்பர்களின் மரியாதையையும் பெற்ற மாணவராகத் திகழ்ந்தார்.

அருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தனது பள்ளிக்கல்வியைச் லக்காட்டூர் எம் ஜி எம் மேல்நிலைப் பள்ளியில் நிறைவு செய்து கல்லூரி படிப்பைச் சங்ஙனாச்சேரி எஸ்.பி கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார்.

தனது வாழ்வில் இறைவனின் அழைப்பை உணர்ந்து சங்ஙனாச்சேரி மறைமாவட்டத்தின் குறிச்சி புனித தோமையார்

இளங்குருத்துவ மடத்தில் ஆரம்பகால குருத்துவ கல்வியினையும், வடவாதூர் புனித தோமையார் குருத்துவக் கல்லூரியில் இறையியலும் தத்துவயியலும் கற்றுத் தேர்ந்தார்.

ஆழ்ந்த ஆன்மிகப்பயிற்சியும் அர்ப்பணிப்பும் நிறைந்த அவரது குருத்துவப் பயணம், 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று அருட்பொழிவைப் பெற்று நிறைவேறியது.

அதனைத்தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள் சங்கனாச்சேரி மறைமாவட்டத்திற்குட்பட்ட நெடுங்குன்னம் புனித அருளப்பர் ஆலயத்தில் துணைப்பங்குத்தந்தையாகத் தனது அருட்பணியைத் தொடங்கினார்.

ஆரம்பகாலத்திலேயே அவரது அர்ப்பணிப்பு மனப்பான்மை, உழைப்புத்திறன் மற்றும் சேவையுணர்வு அனைவரையும் கவர்ந்தது.

மக்களுக்கு நேரடியாகச் சேவை செய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் அவர் நித்திரவிளை மற்றும் கிறிஸ்துராஜபுரம் ஆலயங்களின் பங்குதந்தையாகப் பொறுப்பேற்றார். அங்கு மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான நிறுவனத்தின் பொறுப்பை ஏற்று, அன்பும் பரிவும் கலந்த சேவையை வழங்கினார். சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களை உயர்த்தவேண்டும் என்ற அவரது எண்ணம் அப்பணியின் மூலம் வெளிப்பட்டது.

பின்னர் 1993 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 அன்று அவர் நாகர்கோவில் அல்போன்சா ஆலயத்தின் பங்குத்தந்தையாகவும், அல்போன்சா பள்ளியின் தாளாளராகவும் பொறுப்பேற்றார்.

அக்காலத்தில் அல்போன்சா பள்ளி தனது ஆரம்ப வளர்ச்சி நிலையில் இருந்தது. குறைந்த வசதிகளும் பல சவால்களும் இன்னல்களும் இருந்தபோதிலும், அருட்தந்தை தாமஸ் அவர்கள் பள்ளியின் தொலைநோக்குப்பார்வையுடன் செயல்பட்டு, வளர்ச்சிக்கான வலுவான அடித்தளத்தை அமைத்தார்.

பள்ளிக்கான நிலங்களை வாங்கி, எதிர்கால வளர்ச்சியை முன்னறிந்து திட்டமிட்டார். பள்ளியின் கட்டட வடிவமைப்பிலும் வளர்ச்சியிலும் நேரடியாக ஈடுபட்டார். இன்று உயர்ந்து நிற்கும் அல்போன்சா பள்ளியின் உள்கட்டமைப்பு அவரது திறமைக்கும் அயராத உழைப்பிற்கும் நிலையான சாட்சிகளாக உள்ளது.

அவரது தலைமையின்கீழ் அல்போன்சா பள்ளி கல்வி, ஒழுக்கம், ஆன்மிகம், கட்டமைப்பு மற்றும் மாணவர் வளர்ச்சி என அனைத்துத் துறைகளிலும் அபார முன்னேற்றம் கண்டது. 2019 ஆம் ஆண்டுவரை தாளாளராகப் பணியாற்றிய அவர், பள்ளியை மாவட்டத்தின் முக்கிய கல்வி நிறுவனங்களில் ஒன்றாக உயர்த்தினார்.

தொடர்ந்த அவரது கல்விச்சேவை பள்ளிப்பருவ மாணவர்கள் என்ற நிலையைக்கடந்து கல்லூரி மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்தது. ஆம்! 2014ஆம் ஆண்டு கருங்கல் சூசைப்புரத்தில் புனித அல்போன்சா கல்லூரி உருவாகவும், வளரவும் அவர் முக்கிய காரணமாக இருந்தார். கிராமப்புற மாணவர்களுக்கும் தரமான உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்ற அவரது உயரிய நோக்கம் இளைஞர்கள் பலரது எதிர்காலத்தை இன்றும் ஒளிரச்செய்து வருகின்றது.

1996ஆம் ஆண்டு தக்கலை சீரோ மலபார் மறைமாவட்டத்தின் உருவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணிகள் மிகவும் பாராட்டப்படத்தக்கன. அவரது தலைமைத்திறன், நிர்வாகத் திறமை மற்றும் அர்ப்பணிப்பு மனப்பான்மை ஆகியனவற்றை மேலும் மெருகேற்றும் வண்ணம் 2019 ஆம் ஆண்டு அவர் தக்கலை சீரோ மலபார் மறைமாவட்டத்தின் குருகுல முதல்வராகவும் அனைத்து ஆங்கிலவழிப் பள்ளிகளின் மேலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

2008 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் அன்று புனித அல்போன்சாவின் புனிதர் பட்ட விழா நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்தில் மிகப்பிரம்மாண்டமாக நடைபெற்றது.

அன்றைய தினம் திருத்தலமாக அறிவிக்கப்பட்ட புனித அல்போன்சா திருத்தலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் மூன்று கத்தோலிக்க மறைமாவட்டங்களையும் ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட அந்த மாபெரும் விழா, அந்நாட்களில் “ஊரே பேசும் நிகழ்வு”ஆக மாறியது. அவரது திட்டமிடும் திறனும் இறைப்பற்றும் அந்நிகழ்வில் தெளிவாக வெளிப்பட்டன.

புனித அல்போன்சாவின் நற்பண்புகளைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், 2000 ஆம் ஆண்டு "புனித அல்போன்சா அகாடமி” யை அவர் தொடங்கினார். ஆண்டுதோறும் புனித அல்போன்சா திருவிழாவை முன்னிட்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அறிவுத்திறன் போட்டிகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, குழந்தைகளின் திறமைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

கல்வித்துறையில் ஏற்படும் மாற்றங்களை முன்கூட்டியே உணர்ந்த அவர், காலத்தின் தேவையைப் புரிந்து பள்ளியில் NEET பயிற்சியையும் அறிமுகப்படுத்தினார். மாணவர்களின் எதிர்கால முன்னேற்றம் குறித்து எப்போதும் சிந்தித்த அவர், ஒவ்வொரு மாணவரின் நலனையும் தனிப்பட்ட அக்கறையுடன் கவனித்தார்.

2018ஆம் ஆண்டு உரோமில் அப்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்ரளை சந்தித்து அவரது ஆசியைப் பெற்றது அவரது நீண்ட நெடிய அருட்பணி வாழ்வின் மறக்க முடியாத தருணமாகும்.

மேலும், தக்கலை சீரோ மலபார் மறைமாவட்டத்தின் குருகுல முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் செங்கோட்டை மற்றும் மதுரைப் பகுதிகளில் புதிய மிஷன் மையங்கள் உருவாகவும் வளரவும் அவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. அவரது மிஷன் உணர்வு பல ஏழைக்குடும்பங்களுக்கு ஆன்மிக ஒளியையும் கல்வி வாய்ப்புகளையும் பொருளாதார உயர்வையும் வழங்கியது.

அவரை நெருக்கமாக அறிந்தவர்கள் அனைவரும் அவரை “உழைப்பின் உருவம்” என்று குறிப்பிடுவார்கள். அவருக்கு 24 மணி நேரம் கூட போதாத அளவிற்கு அவர் இடையறாது உழைத்தார். பணியில் ஒருபோதும் சோர்வடையாத அவர், தனது வாழ்க்கை முறையால் மற்றவர்களையும் உழைப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் ஊக்குவித்தார். அவரது நேர்மை, பொறுப்புணர்வு, திட்டமிடல் மற்றும் பணி–நெறிமுறைகள் அனைவராலும் பாராட்டப்படுகிறது.

அவரது வெற்றிகளின் பின்னால் இருந்த மிகப்பெரிய இரகசியம் இறைவேண்டல். “இறைவனால் எல்லாம் முடியும்” என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவர் இடையறாது ஜெபித்து வாழ்ந்தார். இறைநம்பிக்கையே அவரது வாழ்வின் அடித்தளமாக இருந்தது.

அல்போன்சா பள்ளி வளாகம் ஒருகாலத்தில் மக்கள் நடப்பதற்கே அஞ்சிய இருள் சூழ்ந்த பகுதியாக இருந்த இன்று கல்வி மற்றும் வளர்ச்சியின் மையமாக மாறியுள்ளது. அந்த மாற்றத்தின் பின்னால் அருட்தந்தை தாமஸ் அவர்களின் கல்விச்சேவை மிகப்பெரிய காரணமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

குருவானவராக இவ்விடம் வந்திருந்தாலும் இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அருட்பணியாளர்கள், மறைமாவட்ட மக்கள் என எண்ணற்றோரின் வாழ்க்கையில் அவர் ஒளிவிளக்காகத் திகழ்கிறார்.

அவர் கட்டியவை வெறும் கல்வி நிறுவனங்கள் அல்ல, மனிதர்களின் எதிர்காலம். அவர் உருவாக்கியவை வெறும் கட்டிடங்கள் அல்ல, நம்பிக்கை, ஒழுக்கம் மற்றும் உயர்ந்த மனித மதிப்புகள் நிறைந்த தலைமுறைகள்.

அருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்களின் வாழ்க்கை, இறைநம்பிக்கை,தன்னலமற்ற சேவை, கல்வி, அர்ப்பணிப்பு மற்றும் மனித நேயத்தின் மறக்க முடியாத வரலாறாக என்றென்றும் எல்லோர் மனங்களிலும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# மறைமாவட்டச் செய்திகள்

## அருட்பணி பேரவைக் கூட்டம்

அருட்பணி பேரவையின் ஐந்தாவது கூட்டம் 2026 மே 1 அன்று, தக்கலை 'சங்கமத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். காலை 9:45 மணிக்கு அருட்பணி மிஜோ புத்தன்புரக்கல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இறைவேண்டலுடன் தொடக்க அமர்வு தொடங்கியது. பேரவை உறுப்பினர். திருமதி பேபி ஜூலியட் சரோஜா அனைவரையும் வரவேற்று பேசினார். இணைச் செயலாளர் திரு. ஷோனிக் ரீகன் முந்தைய கூட்டத்தின் அறிக்கை சமர்ப்பித்தார். அறிமுக அமர்வின்போது, ஆசிரியர் திரு. ஜான் குமாரி தோழன் அவர்கள் எழுதிய 'இந்தீவரம்' (Indeevaram) என்ற நூலை, அருள்பணி ஜஸ்டின் செருவேலில் அறிமுகப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, அன்றைய சிறப்புப் பேச்சாளரான அருள்பணி டார்பெல்லோ கிறிஸ்துதாஸ் 'நம்பிக்கை வாழ்வும் பகிர்வும்' (Life of Faith and Sharing) என்ற தலைப்பில் முக்கிய உரையை ஆற்றினார். பின்னர், இக்கூட்டம் பொதுவான கேள்வி-பதில் மற்றும் கலந்துரையாடல் அமர்வாக மாறியது. இயக்குனர் பேரருள்பணி தாமஸ் சத்யநேசன் அவர்கள் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்த தகவல்களை வழங்கினார்; இறுதியாக திரு. அகஸ்டின் அவர்கள் நன்றியுரை ஆற்ற, கூட்டம் அதிகாரப்பூர்வமாக நிறைவடைந்தது.

## இல்வாழ்வு இயக்க ஆண்டு விழா

தக்கலை மறைமாவட்ட இயக்க ஆண்டு விழா, 2026 மே 16 பிற்பகல் 2:00 மணிக்கு தெற்றியோடு, ஆசீர் வித்யாலயா அரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மறைமாவட்ட குருகுல முதல்வர் அருள்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் தலைமை தாங்கினார். தாய்மார்கள் தங்கள் கலைத்திறமைகளை வெளிப்படுத்தும் பல கலைநிகழ்ச்சிகளை வழங்கினர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு 1 பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் மறைமாவட்டத்தைச் சார்ந்த 400க்கு மேற்பட்ட தாய்மார்கள் கலந்து கொண்டனர். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்திருந்தார்.

## ஊடக பயிற்ச்சி முகாம்

தக்கலை மறைமாவட்ட 'புலரி கம்யூனிகேஷன்ஸ்' சார்பாக 2026 ஏப்ரல் 26 முதல் மே 9 வரை பல்வேறு துறவற சபைகளைச் சேர்ந்த அருள்சகோதரிகளுக்கான 'மேம்பட்ட ஊடகப் பயிற்சி' நடைபெற்றது. இப்பயிற்சிக்கு முன்னோடியாக, 2026 ஏப்ரல் 23 முதல் 25 வரை மூன்று நாள் 'அடிப்படை ஊடகப் பயிற்சி'யும் (Basic Media Training) நடத்தப்பட்டது. அடிப்படைப் பயிற்சியில் 18 அருள்சகோதரிகளும், மேம்பட்ட பயிற்சியில் 23 அருள்சகோதரிகளும் பங்கேற்றனர். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்கள் நிகழ்வைத் தொடங்கி வைத்தார். கேமரா கையாளுதல், போன்ற பல்வேறு ஊடகத் திறன்கள் குறித்த பயிற்சிகள் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டன. இயக்குனர் அருள்தந்தை ராபின்ஸ் குழிக்கோடில் அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

## குரு மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்ச்சி முகாம்

2026- மே 11 முதல் 15 வரை, மறைமாவட்டத்தைச் சேர்ந்த இறையியல் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி தக்கலை 'சங்கமத்தில் நடைபெற்றது. திரு. ஜான் குமரி தோழன் அவர்கள் தமிழ் வாசிப்பு, எழுத்து மற்றும் பொது மேடைப் பேச்சுத் திறன்களை மேம்படுத்துவது குறித்து வகுப்புகளை வழிநடத்தினார். அருள்பணி. அஜின் ஜோஸ் அவர்களின் தலைமையில் "விண் பாதையில்" செப வழிபாடுகள் மூலம் ஒவ்வொரு மாலையும் திருவழிபாடு நிகழ்வுகள் நடைபெற்றது. அருட்சகோதரி மார்கரிட்டா SCB அவர்கள், இளைஞர் பணி மற்றும் தலைமைத்துவப் பண்புகள் குறித்த பயிற்சியை வழிநடத்தினார். அருள்பணி. மகேஷ் ஆண்டனி அவர்கள் Caring for the Uncared: Acts of Mercy என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். மேலும், அருட்சகோதரி ஜெஸ்லெட் CMC அவர்கள், ஆன்மீக - உளவியல் (Psycho-Spiritual Integration) குறித்த பயிற்சியை வழங்கினார். இறுதியாக, டிஜிட்டல் தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த வகுப்புகள், காணொளித் தொகுப்பு (video editing), அனிமேஷன் மற்றும் ஊடக நற்செய்திப் பணி ஆகியவை குறித்து அருள்பணி. ராபின்ஸ் குழிக்கோடில் அவர்கள் பயிற்சி வழங்கினார். அருள்பணி. பாபி கொச்சுபரம்பில் அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

# இதர செய்திகள்

- அருட்சகோதரி ஆலிஸ் கட்டக்காயம் SABS (78) அவர்கள் 2026 மே 3 அன்று இறைவனடி சேர்ந்தார். ஒரு அருட்சகோதரியாக, அவர் நமது மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 21 ஆண்டுகள் பணியாற்றியவர். இவரது இறுதிச் சடங்கு 2026 மே 5 அன்று பிற்பகல் 2:30 மணிக்கு சூசைபுரம், புனித சாந்தாள் SABS மாகாண இல்லத்தில் நடைபெற்றது.
- அருட்சகோதரி லிசி செபாஸ்டின் SDS (65) அவர்கள் 2026 மே 18 அன்று இறைவனடி சேர்ந்தார். காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தின் காஞ்சியார் புனித மேரி பங்கை சேர்ந்தவர். தக்கலை மறைமாவட்டத்தில் மஞ்சலுமூடு (1994) மற்றும் கரோடு (2025–2026) ஆகிய இடங்களில் பணியாற்றினார்.
- அருட்சகோதரி லூயிஸ் மேரி கொடக்கல்லில் SDS (83) அவர்கள் 2026 மே 18 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் கோதமங்கலம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த கவக்காடு பங்கை சார்ந்தவர். தக்கலை மறைமாவட்டத்தின் மஞ்சலுமூடு (1981 – 1991; 2026) மற்றும் கரோடு (1994 – 1995) ஆகிய இடங்களில் ஏறக்குறைய 12 ஆண்டுகள் பணியாற்றினார். இவருக்கான இறுதிச் சடங்குகள் 2026 மே 19 அன்று பிற்பகல் 2:00 மணிக்கு மஞ்சலுமூடு SDS கன்னியர் இல்ல சிற்றாலயத்தில் நடைபெற்றது.
- அருள்பணி. சான்ஜோ தேனேப்ளாக்கல் அவர்களின் தந்தை திரு. ஜோசப் குருவிளா (60) அவர்கள் 2026 மே 8 அன்று காலமானார். நித்திய இளைப்பாற்றியை அருளவும், துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்கவும் வேண்டுகிறேன்.
- அருட்சகோதரர் ஆல்பின் வெட்டுக்காட்டில், அவர்கள் 2026 மே 6 அன்று முக்கூட்டுக்கல் புனித மரியன்னை இளங்குருமடத்தில் குருத்துவ திருவுடையைப் பெற்றுக்கொண்டார்.
- நாகர்கோவில், புனித அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வராகப் பணியாற்றிய அருட்சகோதரி லிஸ்பத் FCC அவர்கள், 2026 மே 1–ஆம் தேதியன்று பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிய முதல்வராக அருட்சகோதரி மரியா அருள் பாலியா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- அருட்தந்தை டோனி கல்லம்பறம்பில் அவர்கள் சங்கனாச்சேரி உயர் மறைமாவட்டம் சபக்குளம், புனித மரியன்னை பேராலயத்தில் இணை பங்குதந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அருட்தந்தை பிபின் வேட்டகோணம் அவர்கள் சங்கனாச்சேரி உயர் மறைமாவட்டம், பூந்தோப்பு புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயத்தில் இணை பங்குதந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த வருடம் மூன்று அருட்சகோதரகள் களப்பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். சகோதரர் பிபின் சேவியர் தக்கலை ஆயர் இல்லத்திலும், சகோதரர் வின்சிலின் சேவியர் 'சங்கமத்திலும், சகோதரர் டெபின் படந்தாலுமூட்டிலும் தங்கள் பணிகளைத் தொடங்கவுள்ளனர்.
- கல்லூரியில் படித்து வரும் அருட்சகோதரர் ஜோஸ்பின் மேத்யூ, மலைக்கோடு, திருக்குடும்ப ஆலயத்தில் தனது கல்வியை தொடர்வார்.
- சகோதரர் ஆலன் மேத்யூ, விருதுநகர் திருதொண்டு தளத்தில் தனது இறைபணியை தொடர்வார்.
- மூலமற்றம் 'சினேகவில்லாவில் பணியாற்றிய அருட்சகோதரி ரோஸ்மி FDSHJ அவர்கள், 19 மே 2026 அன்று பணியிட மாற்றம் செய்யப்பட்டார். புதிதாக அருட்சகோதரி மேரி FDSHJ அவர்கள் 30 மே 2026 அன்று தனது பணியைத் தொடங்குகிறார்.
- FCC அருட்கன்னியர்களின் நிரந்தர வார்த்தைப்பாடு, அழகியமண்டபம் சான்ஜோ மாகாணத்தில், 2026 மே 22 அன்று நடைபெற்றது அருட்சகோதரிகள் சாம் பிரியா FCC, அனுஜா FCC, சோபியா ஜோஸ் FCC மற்றும் ஷைனி அல்போன்சா FCC ஆகியோர் நிரந்தர துறவற உறுதிமொழி ஏற்றனர்.
- கோழிப்போர்விளையில் புதிய குருக்கள் இல்லத்தைக் கட்டுவது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக, 2026 மே 26 அன்று நடைபெற்ற அருட்தந்தையர்கள் கூட்டத்தில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது: அவர்களின் விவரம் : பேரருள்பணி. ஜஸ்டின் செறுவேலில் (ஒருங்கிணைப்பாளர்), அருள்பணி. அனில் ராஜ், அருள்பணி. வினு D ஜோசப், பேரருள்பணி. ஆன்றணி ஜோஸ், பேருருள்பணி. கிறிஸ்துதாஸ், அருள்பணி. பிரிண்டோ குரியஸ் மற்றும் அருள்பணி. டோபின் ஆலப்புரக்கல்.

# மறைவட்டச் செய்திகள்

## தூசைபுரம்

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்



பாத்திமா அன்னை ஆலயத்தில் திருவிழாவை முன்னிட்டு மே மாதம் 12,13,14ஆகிய மூன்று நாட்கள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. மே 15 அன்று பங்குதந்தை அருட்பணி. லிஜோ தெக்கேல் அவர்களால் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. மே 16 அன்று ஆடம்பர திருப்பலி மற்றும் ஜெபமாலை பவனி நடைபெற்றது. இறுதி நாளாகிய மே 17 அன்று ராசை திருப்பலி மற்றும் திருமுழுக்கு நடைபெற்றது.

மே 24 அன்று பங்குதந்தை அவர்களின் பிரிவு உபச்சார விழா நடத்தப்பட்டு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை



விசுவாசப் பயிற்சியில் கலந்து கொண்ட 37 மாணவர்கள் 6 ஆசிரியர்கள் பங்குதந்தை மற்றும் அருள்சகோதரி ஜின்சி ஆகியோர் தலைமையில் மேழக்கோடு திருத்தலம் மற்றும் திருவனந்தபுரம் பகுதிகளுக்கு சுற்றுலா சென்றனர்.

2026 மே 23 அன்று புல்லாரப்பள்ளி ஜெயினா என்ற குழந்தைக்கு அருட்தந்தை டோஜி தலைமையில் புதுநன்மை வழங்கப்பட்டது. மேலும் மே 24 அன்று ஜெயிடன் என்ற குழந்தைக்கு திருமுழுக்கும் வழங்கப்பட்டது.

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

2026 மே 24 அன்று திருப்பலிக்கு பின் பங்குத்தந்தைக்கு பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது. அருட்தந்தைக்கு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

### தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

2026 மே 24 அன்று திருப்பலிக்கு பின் பங்கு தந்தைக்கு பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது. அருட்தந்தைக்கு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

2026 மே மாதம் 2 முதல் 9 வரை 8 நாள்கள் பங்கில் விசுவாச பயிற்சி விழா சிறப்பாக நடைபெற்றது. அருள் சகோதரர் மெல்பின் பயிற்சியை சிறப்பாக நடத்தினார். எட்டு நாட்களும் உறவியங்கள் சார்பில் மாணவ மாணவியருக்கு உணவு தயாரித்து வழங்கப்பட்டது. 11.05.26 திங்கள் ஒருநாள் சுற்றுலா பூவார், கோவளம் போன்ற பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
பங்கில் பணியாற்றிய அருள் சகோதரி ஆலிஸ் அவர்கள் 3.5.26 இல் இறையடி சேர்ந்தார். அவரது நல்லடக்க சடங்கில் பங்கு மக்கள் திரளாக பங்கேற்றனர். நூறு மேனி போட்டியானது மே 24 அன்று நடைபெற்றது. மே 24 அன்று சிறப்பு திருப்பலியோடு பங்கில் மறைக்கல்வி புதிய கல்வி ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது.. ஆசிரியர்களும் மாணவர்களும் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். பின் விசுவாச பயிற்சி விழாவில் பங்கேற்ற பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.
மாதர் ஜோதிஸ் தலைமையில் மறை மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டியில் பங்கு அன்னையர் திரளாக பரிசுகளை பெற்றனர். குழு போட்டிகளில் கேடயமும் பெற்றனர்.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் மஞ்சாலுமூடு

அன்னை மரியாவின் வணக்க மாத கொண்டாட்டம் 2026 மே 1 முதல் 31 ஆம் தியதி வரை நடைபெற்றது. தினமும் மாலை திருப்பலி அதை தொடர்ந்து குருசடியில் ஜெபமாலை, நவநாள் நடத்தப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது



8 நாட்கள் நடைபெற்ற VPV யின் முடிவில் மே 2 ஆம் தியதி ஒரு நாள் இன்ப சுற்றுலா நடைபெற்றது. எடத்துவா புனித ஜார்ஜியார் ஆலயத்தில் மே 5 ஆம் தியதி நடைபெற்ற தமிழ் திருப்பலியில் ஆலய மக்கள் சிலர் கலந்து கொண்டனர்.

மே 24 ஆம் தியதி அருட்தந்தை அனூப் அவர்கள் உதவி பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார். மே 29 ஆம் தியதி அன்று ஆலயத்தின் மேல் தளத்தில் இயேசு கிறிஸ்துவின் புதிய திருவுரும் மற்றும் அதன் கண்ணாடி கதவு ஆகியவை நிறுவப்பட்டது.

## படந்தாலுமூடு

### ▶ திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு



மாதாவின் வணக்க மாதத்தை முன்னிட்டு 2026 மே 18 முதல் 23 வரை மாலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. மே 24 அன்று, உளவியல் படிப்பிற்காக ஒரு வருடம் ஆலயத்தில் தங்கி படித்து வந்த பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களுக்கு திருப்பலிக்குப் பின் பிரிவு உபச்சார விழா நடைபெற்றது.

மே 24 அன்று புதிய மறைக்கல்வி ஆண்டு பங்குத்தந்தை அவர்களால் குத்து விளக்கு ஏற்றி துவங்கி வைக்கப்பட்டது.

மேலும், பெந்தேகோஸ்தே திருவிழாவின் போது புதிதாக பள்ளிக்கூடத்தில் சேருகின்ற மழலைகள் பங்குத்தந்தை முன்னிலையில் அரிசியில் எழுதி தங்கள் பள்ளி படிப்பை துவங்கினார்கள்.

2026 மே 31 அன்று மரியாயின் சேனை புனித சகாய மாதா கியூரியா ஆண்டு விழா படந்தாலுமூடு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக கொமித்சிய ஆன்மீக இயக்குனர் பேரருட்தந்தை ஜோன்சிலால் அவர்களும் பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள். கியூரியா ஆன்மீக இயக்குனர் பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். படந்தாலுமூடு மறைவட்டத்தை சார்ந்த மரியாவின் சேனை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

### ▶ புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம், கழுவன்திட்டை

2026 மே 10 அன்று பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது மே 24 அன்று புதிய மறைக்கல்வி ஆண்டு குத்துவிளக்கேற்றி துவங்கி வைக்கப்பட்டது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக நடைபெற்ற போட்டிகளில் மாணவர்கள் பங்கு பெற்று பரிசுகளை பெற்றார்கள். மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.

### ▶ புனித மத்தேயு ஆலயம், அண்ணிக்கரை

அன்னை மரியாவின் வணக்க மாதத்தை முன்னிட்டு மே 01 முதல் 31 வரை அனைத்து நாட்களிலும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலையும் அதை தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.

மே 24 அன்று பங்குதந்தை செபாஸ்டின் புத்தன்புரைக்கல் அவர்கள் அவர்கள் பணி மறுதலாகி சென்றார்கள். மேலும் அருள்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் புதிய பங்கு தந்தையாக பொறுப்பேற்றார்கள்.

## களியல் மறைவட்டம்

### ▶ புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி

மறைக்கல்வி மாணவர்களின் VPV கொண்டாட்டம் 2026 மே 3 முதல் மே 8 வரை 6 நாட்கள் நடைபெற்றது. பங்குதந்தை மற்றும் தலைமை ஆசிரியர் அருட்சகோதரி சோனா SH. அவர்களின் வழிகாட்டுதலின்படி அருட்சகோதரர் சிபின் அவர்களின் தலைமையில் VPV மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் உறவிய அடிப்படையில் தேனீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மே 10 அன்று பங்கில் இருந்து வேளாங்கண்ணி திருப்பயணம் நடைபெற்றது. 55 பேர் இப்புனித பயணத்தில் பங்கேற்றனர்.

மே 14 அன்று VPV மாணவர்களுக்கான ஒரு நாள் சுற்றுலா, மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசியார் திருத்தலம் பூவாறு படகு சவாரி, அடிமலத்துறை, வெட்டுக்காடு, கொச்சு வேளி, கோவளம் ஆகிய இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மே 17 அன்று பங்களவில் நூறு மேனி திருவிவிலிய வசனம் எழுதும் போட்டி நடைபெற்றது. இதில் மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மே 23 அன்று நடைபெற்ற ஆசிரியர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கில் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மே 24 பெந்தகோஸ்தே திருவிழா அன்று காலை திருப்பலிக்கு முன்னதாக மறைக்கல்வி தொடக்க விழாவானது நடைபெற்றது .குத்து விளக்கு ஏற்றி செப வழிபாடுகள் நடத்தப்பட்டது. மறைக்கல்வி ஆசிரியர்கள் மெழுகுத்திரி ஏந்தி உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர் மாணவர்களும் உறுதிமொழி ஏற்றனர் .

மே 31 அன்று மறைக்கல்வி தொடங்கப்பட்டது. காலை 11 மணி முதல் 12:30 மணி வரை CMC அருள்கன்னியர்களால் மறைக்கல்வி பிள்ளைகளுக்கு கிறிஸ்டீன் தியானம் நடத்தப்பட்டது. இத்தியானத்தில் மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### புனித சூசையப்பர் ஆலயம் காரோடு

காரோடு புனித சூசைப்பர் ஆலயத்தின் திருவிழா ஏப்ரல் மாதம் 27 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருவிழாவின் முதல் நாள் ஏப்ரல் 27 அன்று இறந்தவர்களுக்கான திருப்பலியும் இரண்டாவது நாள் புதிய குருசடி மந்திரிப்பு மற்றும் மாணவர்களுக்கான புதுநன்மை வழங்குதல் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 29,30 மே 01 ஆகிய தினங்களில் அருட்தந்தை ஆன்றணி நெல்சன் தலைமையில் சிறப்பு நற்செய்தி பெருவிழா நடைபெற்றது மே 02 சனிக்கிழமை அன்று திருப்பலியை தொடர்ந்து ஆடம்பர திருப்பவனி நடைபெற்றது. மே 03 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி அளவில் அருட்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் தலைமையில் ராசை திருப்பலியும், அருட்தந்தை பீட்டர் ஆனந்த் அவர்களால் மறையுரையும் வழங்கப்பட்டது. அன்பின் விருந்து வழங்கப்பட்டது

விசுவாச பயிற்சி கொண்டாட்டம் மே 04 துவங்கி மே மாதம் 10 வரை நடைபெற்றது. விசுவாச பயிற்சி கொண்டாடத்தின் சுற்றுலா மே மாதம் 12 அன்று நடைபெற்றது. நெய்யாறு அணை மற்றும் வெட்டுக்காடு ஆலயம் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு மாணவர்கள் அழைத்து செல்லப்பட்டனர்.

மே 22 அன்று இளையோர் இயக்கம் சார்பாக கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்றனர்.



மே 24 அன்று பங்குதந்தை அருட்பணி. ஜெஸ்டின் சுதீஷ் அவர்களின் பணிமாற்றத்தின்

நன்றி நவிழ்தல் விழா, காலை திருப்பலிக்கு பின்னர் நடைப்பெற்றது. அன்றைய தினம் புதிய பங்கு பணியாளருக்கான வரவேற்கும் நிகழ்வும் நடைப்பெற்றது.

### திரு இருதய ஆலயம் பள்ளிக்கோணம்

2026 மே 01 அன்று வெள்ளிக்கிழமை விசுவாச பயிற்சி விழா நிறைவு, மற்றும் தொழிலாளர் பாதுகாவலர் "புனித சூசையப்பர்" நினைவு விழா நிகழ்வுகள் மாலை திருப்பலியுடன் நடைபெற்றது.

மே 17 அன்று புதிதாக பொறுப்பேற்க வருகை தந்த துணை பங்குத் தந்தை ஜோபின் அவர்களை பங்குப் பேரவை தலைவர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள்.

மே மாதம் 17,18,19 ஆகிய மூன்று நாட்கள் CMC அருட்சகோதரிகள், மதர் சூணா CMC அவர்கள் தலைமையில் "Home Mission" நடைபெற்றது.

2026 மே 20 முதல் 24 வரை ஐந்து நாட்கள், குடும்ப விழா, நற்செய்தி பெருவிழா, ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

## தக்கலை – பிலாங்காலை மறைவட்டம்

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

விசுவாச பயிற்சி விழாவின் நிறைவு நாளை முன்னிட்டு 2016 மே 3 அன்று பங்குதந்தை பேரருட்பணி ஜோஷி தேவலக்கர CMI அவர்களின் தலைமையில் பவனியானது ஆலயத்திலிருந்து சகாயநகர் மலங்கரை கத்தோலிக்க ஆலய நுழைவாயில் வரை நடந்தது. மறைக்கல்வி மாணவர்களும் பரிசுகளும் வழங்கப்பட்டது. தொடர்ந்து 4ம் தேதி காலை 5 மணிக்கு திருப்பலியும் திருவனந்தபுரம், வெட்டுகாடு, வேளி, சங்குமுகம், கோவளம், லுலூ மால் பகுதிகளுக்கு மாணவர்கள் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.

மே 09 காலை 11.00 மணிக்கு நோயாளிகளுக்கான சிறப்பு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. இறுதியில் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது



மே 10 ம் தேதி 3 திருப்பணியாளர்களுக்கு கொத்தீனா வழங்கப்பட்டது மறைக்கல்வி ஆசிரியர் கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது அருட்சகோதரர் டோனி அவர்களுக்கு பிரியா விடை அளிக்கப்பட்டது. மே 16 அன்று மறைமாவட்ட அளவில் நடைபெற்ற மாதர் ஜோதிஸ் ஆண்டுவிழாவில் தாய்மார்கள் கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர்.

மே 23 அன்று கல்லுவிளையில் நடைபெற்ற மறைக்கல்வி ஆசிரியர்யர்களுக்கான கருத்தமர்வில் அவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

2026 மே 24 அன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முடத்துப்பாடம் அவர்கல் வருகை தந்து புதியஅருட்தந்தை ரென்னி களத்தில் CMI அவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

மே 26 அன்று பங்குத்தந்தை பேரருட்பணி ஜோஷி தேவலக்கர CMI அவர்களை கோட்டயம் மாந்தனம் ஆலயத்தில் பிலாங்காலை பங்குமக்கள் கைசாலவிளை பங்குமக்கள், பள்ளிக்கூட ஆசிரியர் இணைந்து கொண்டு சென்று விட்டுவந்தனர்.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – தடிக்காரன்கோணம்

புனித ஜோசப் ஆலயத்தில் இல்ல அர்ச்சிப்பு நடைபெற்றது.மே 25 முதல் 31 வரை ஆலய திருவிழா கொண்டாடப்பட்டது. 2026 மே 26,27,28 ஆகிய நாட்களில் திருப்பலி மற்றும் தியானம் அருட்தந்தை ரிச்சர்ட் தலைமையில் நடத்தப்பட்டது.

### ▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – காட்டாத்துறை

மறைக்கல்வி மாணவர்களுக்கான விசுவாசப் பயிற்சி விழா மே 1 ம் தேதி நிறைவடைந்தது. தொடர்ந்து மே 2 ம் தேதி அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் தலைமையில் ராமேஸ்வரம் சுற்றுலா சென்றனர்.

மே 17 அன்று பங்களவில் நூறுமேனி வசனம் எழுதும் போட்டி நடைபெற்றது. அன்றைய தினம் ஆலயத்தில் பணியாற்றிய அருட்சகோதரிகள் இடமாறுதல் பெற்று சென்றனர் புதிய அருட்சகோதரிகள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

மே 24 ம் தேதி மறைக்கல்வி தொடக்கவிழா அருட்தந்தை அபிலாஷ் சேவியர் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் இடமாறுதல் பெற்று புதிய பங்குதந்தையாக அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில் பொறுப்பேற்றார்கள்

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

## தென்காசி மறைத்தள செய்திகள்

வாஞ்சி நகர், புனித மரியன்னை ஆலயத்தில் VPV, ஏப்ரல் மாதம் 28,29,30 ஆகிய மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணி அளவில் திருப்பலியுடன் ஆரம்பிக்கப்பட்டு மாலை 3:30 மணி வரை நடைபெற்றது. வகுப்புகள், செயல்பாடுகள், புனிதர்களின் வரலாறு, பாடல்கள், விளையாட்டுகள் போன்றவற்றால் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. தென்றல் நகர் வரை பேரணி நடத்தப்பட்டது. அனைத்து நாட்களிலும் மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

புளியரை, குழந்தை தெரசாள் ஆலயத்தில் விசுவாசப் பயிற்சி விழா மே மாதம் 4 முதல் 9 ஆம் தேதி வரை 6 நாட்கள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. 35 ற்க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் சுற்றுப்புறமுள்ள ஊர்களில் இருந்து வருகை தந்திருந்தனர். காலை 9.30 மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பிக்கப்பட்டு மதியம் 1:30 மணிவரை வகுப்புகள், பாடல்கள், ஆடல்கள், பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகள் போன்றவற்றால் மாணவ மாணவிகளை உற்சாகமூட்டினார். அருட்சகோதரர் ஆண்டனி அவர்கள் வருகை தந்து நிகழ்வுகளை வழிநடத்தினார். பங்குதந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் மற்றும் உதவி பங்குதந்தை அனுப் ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தார். அனைத்து நாட்களிலும் மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

### *சகாய மாதா ஆலயம் சுந்தரபாண்டிபுரம்*

சகாயமாதா ஆலயம் சுந்தரபாண்டியபுரத்தில் மே மாதம் 14, 15 ,16 ,17 ஆகிய தேதிகளில் VPV நடைபெற்றது. 33 குழந்தைகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். பங்குத்தந்தை அருட்பணி. ஜாண் ஜோசப் அவர்கள் நிகழ்வுகளை மிகச்சிறப்பாக வழி நடத்தினார்கள். வகுப்புகள், பயிற்சிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு குழந்தைகளை உற்சாகமூட்டப்பட்டினர். இறுதி

நாளில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

***மாதாந்திர தியானம்***

தென்காசி மறைத்தள சார்பில் நடைபெறும் தியானம் *2026* மே *16* ஆம் தேதி புளியறை குழந்தை தெரசாள் ஆலயத்தில் நடத்தப்பட்டது. காலை *9:30* மணி அளவில் செபமாலையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து புதுவாழ்வு தியான இல்லத்தை சார்ந்த சகோதரர் எட்வின் அவர்கள் தியான செய்தி வழங்கினார்கள். ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளமும் வழங்கப்பட்டது. ஏராளமான மக்கள் வருகை தந்த இறையாசீர் பெற்று சென்றனர். அனைவருக்கும் மதியம் கஞ்சி வழங்கப்பட்டது.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

**ஜூன் *01* – இறுதிச் சடங்கு திருப்பலி, நாகர்கோவில்**

**ஜூன் *02* – அருள்தந்தை தாமஸ் பவ்வத்துபறம்பில் அவர்களின் இறுதிச் சடங்கு, கூரப்பட்டா**

**ஜூன் *05* – மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம்**

**ஜூன் *28* – கைக்காரர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான பயிற்சி**

**ஜூன் *30* – மறைவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம்**

## MONTHLY AGENDA – JUNE 2026

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Mon | **FA :** Doctor's Visit<br>**SMMS :** Re – opening of the Seminary |
| 5 | Fri | **KKSSS:** World Environmental day Celebration<br>**PSSS:** Distribution of Saplings |
| 6 | Sat | **VC :** Vocation Promotor Vist – Arukani Forane<br>**KII:** Anniversary<br>**SMYM:** Manjalumoodu forane unit visit & forane gathering<br>**CML:** Inauguration of Activity year in units<br>**SVP :** CC Meeting |
| 7 | Sun | **CAT :** Forane Directors Meet |
| 11 | Thu | **FA :** Marriage Preparation Course |
| 12 | Fri | **FA:** Marriage Preparation Course |
| 13 | Sat | **CAT:** HMs Meeting<br>**FA:** Marriage Preparation Course<br>**MJ:** Diocesan Leaders Meet<br>**CRI:** Monthly Recollection<br>**TM :** Bible Convention at Vanchinagar<br>**PC :** Gathering of Drama Artists and Parish Team |
| 14 | Sun | **URM:** Parish Visit<br>**CML :** Election of new Office – bearers in Units, Noorumeni Diocesan Level Competition<br>**SMMS :** Welcome to New Priests<br>**SVP :** AC Meeting |
| 15 | Mon | **FA:** Doctor's Visit |
| 20 | Sat | **KKSSS:** Orientations about new Academic<br>**CAT :** Promoters Meet<br>**STI :** Distant education begins |
| 21 | Sun | **CAT :** Re-examination for Classes X, XII<br>**CML:** General Body Meeting |
| 22 | Mon | **KKSSS :** Income Generation Programe<br>**HC :** World Environmental Day Celebration<br>Forane Priest conference |
| 23 | Tue | Forane Priest conference |

| | | |
|---|---|---|
| 24 | wed | Forane Priest conference |
| 26 | Fri | **MS:** Training for Nithiravilai Curia |
| 27 | Sat | **SINAI :** One day Retreat<br>**ASc:** Awareness Rally<br>**TM :** Mission Meet |
| 28 | Sun | **URM :** Soosaipuram Forane Leaders Retreat<br>**CAT :** BTCT<br>**KII :** Forane level competition<br>**SMYM :** Central team mission visit<br>**CML :** General Body Meeting |
| 29 | Mon | **ET :** Mission Meet |

**Fr. ANTONY JOSE,**

**CO-ORDINATOR**

| BIRTHDAYS OF REV. FATHERS - JUNE - 2026 | |
|---|---|
| Fr. ANIL RAJ DOMINIC | 02 |
| Fr. JOHNSILAL ARACKAPARAMBIL | 03 |
| Fr. JUSTIN CHERUVELIL | 04 |
| Fr. TOJI KOZHUVAKANDATHIL | 07 |
| Fr. MATHEW JUDIT CMI | 12 |
| Fr. RINCE KADANTHODAN | 12 |
| Fr. JOSE PAUL PURAYIDATHIKUNNEL | 19 |
| Fr. SAJAN NETTAPONGU | 21 |
| Fr. MIJO PUTHENPURAYIL | 25 |

| BISHOP'S ENGAGEMENTS - JUNE 2026 | | | |
|---|---|---|---|
| DATE | DAY | TIME | EVENTS |
| 1 | Mon | 11.00 am | **Nagercoil:** Holy Qurbana for Fr. Thomas Pawathuparampil |
| 2 | Tue | 01.00 pm | **Kooroppada:** Funeral Ceremony of Fr. Thomas Pawathuparampil |
| 3 | Wed | 06.00 pm | **Kuzhikkattusserry:** Holy Qurbana |
| 4 | Thur | | Bishop's House |
| 5 | Fri | 06.45 pm | **Vayalinkarai:** Feast Day Holy Qurbana |
| 6 | Sat | | Thuckalay >>Thrissur |
| 7 | Sun | | Thrissur |
| 8 | Mon | | Thrissur >> Thuckalay |
| 9 | Tue | 05.30 pm | **Pachakadu:** Shrine Blessing and Qurbana @ Sacred Heart Church |
| 10 | Wed | 08.00 pm | Online meeting with CML National Team |
| 11 | Thur | 06.00 pm | **Thuckalay:** Cathedral Finance Committee Meeting |
| 12 | Fri | 05.00 pm | **Padanthalumoodu:** Feast Day Holy Qurbana |
| 13 | Sat | | Thuckalay >>Thrissur |
| 14 | Sun | | Thrissur >> Thuckalay |
| 15 | Mon | 10.00 am | **Thuckalay:** Inter Department meeting |
| 16 | Tue | 06.00 pm | **Thuckalay:** Community Empowerment Core Team Meeting |
| 17 - 19 | Wed - Fri | | Visit to the Extend Territory Priests. |
| 20 | Sat | | Thuckalay >>Thrissur |
| 21 | Sun | | Thrissur >> Thuckalay |
| 22 | Mon | | Bishop's House |

| | | | |
|---|---|---|---|
| 23 | Tue | 10.00 am<br>02.00 pm | **Thuckalay:** Finance Council<br>**Thuckalay:** Education Committee Meeting |
| 24 | Wed | 09.30 am<br>06.00 pm | **Thuckalay:** Curia Meeting<br>**Thuckalay:** Reception for the Sisters (First & Final Profession) |
| 25 | Thur | 10.00 am | **Thuckalay:** TPWA Meeting |
| 26 | Fri | 01.00 pm | **Kannadi:** First Death Anniversary of father of Bro. Jubin |
| 27 | Sat | 04.30 pm | **Tenkasi:** Mission Meeting |
| 28 | Sun | 09.30 am<br>02.00 pm | **Thettiyode:** Feast Day Qurbana and Blessing<br>**Sangamam:** Kaikkarars Annimation program |
| 29 | Mon | 06.00 pm | **Muzhucode:** Feast Day Qurbana |
| 30 | Tue | 10.00 am<br>05.30 pm | **Thuckalay:** Meeting of Forane Vicars<br>**Marappady:** Feast Day Holy Qurbana |

**Fr. Sunil Antony, Secretary to Bishop**

| FEASTDAYS OF REV. FATHERS - JUNE - 2026 | |
|---|---|
| Fr. JUSTIN SUTHEESH | 01 |
| Fr. RINCE KADANTHODAN MCBS | 03 |
| Fr. ANTONY JOSE | 13 |
| Fr. ANTONY CHUNDALIKKAT | 13 |
| Fr. ANTONY MADAPURACKAL | 13 |
| Fr. ANTONY MAHESH | 13 |
| Fr. LINTO THAKADIYEL | 13 |
| Fr. SUNIL ANTONY | 13 |
| Fr. JOGESH JOSEPH | 24 |

MAY 1

PASTORAL COUNCIL AT SANGAMAM



MAY 6

VESITION OF BRO.ALBIN AT MUKOOTTUKAL



MAY 22

FCC FINAL PROFESSION AT AZHAKIYAMANDAPAM



**MAY 23**

CATECHISM TEACHERS SEMINAR AT KALLUVILAI



**MAY 28**

MOTHER PETRA GOLDEN JUBILEE AT DNN KARODE





For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570